**செய்தி வெளியீடு எண்– 638. நாள் 10.11.2011**

## மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஆவின் அதிகாரிகளின் ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. வி.மூர்த்தி அவர்கள் தலைமையில் 10.11.2011 அன்று மாலை தலைமைச் செயலகத்தில் தமிழகத்தில் பால் கொள்முதலை அதிகரிக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆவின் அதிகாரிகளின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை செயலர் திரு ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப. மற்றும் பால்வளத்துறை ஆணையர் /ஆவின் நிர்வாக இயக்குநர் திரு ம.ரா. மோகன், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகம் பால் உற்பத்தியில் முன்னிலை மாநிலமாக திகழ பால் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள், இதனடிப்படையில், அரசின் பால்வளத் திட்டங்களை ஆவின் அதிகாரிகள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு கிராமங்களில் செவ்வனே செயல் படுத்தவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறித்தினார். இத்திட்டங்களினால் தமிழகத்தில் பால் உற்பத்தியாளர்கள் மிகுந்த பயனடைந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பணப்பட்டுவாடா குறித்த நேரத்தில் கொடுக்கப்படவேண்டும், அதேசமயம் நுகர்வோர்களுக்கு பால் விநியோகம் குறித்த நேரத்தில் செய்யப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார். பால் கொள்முதலை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டு பால் கொள்முதல் நாளொன்றுக்கு 25 இலட்சம் லிட்டர் என்ற இலக்கினை இம்மாதம் அடைய வேண்டும் என்று அனைத்து மாவட்ட ஆவின் அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டார். மேலும், புதிய வகை பால் மற்றும் பால் பொருட்களை ஆவின் அறிமுகப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்கவும் மற்றும் நுகர்வோர்களுக்கு பால் மற்றும் பால் பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், பால்வளத் துறை துணை ஆணையர் திரு.எம்.ரவிக்குமார், அனைத்து மாவட்ட ஆவின் பொது மேலாளர்கள், துணைப் பதிவாளர்கள் (பால்வளம்) மற்றும் ஆவின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**